தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 35/மா/2020
நாள். 28.12.2021

திரு R. பாஸ்கர்,
ஆவடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
ஆவடி மாநகராட்சி, – எதிர்மனுதாரர்
ஆவடி.

சென்னை – 600 055, IAF ஆவடி, மிட்டனமல்லி காலனி, பாடசாலை தெரு, எண்.22/1 என்கிற முகவரியில் வசிக்கும் R. பாஸ்கர் அவர்களின் 02.03.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.03.2020 அன்று பெறப்பட்டு 35/2020 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை – 600 055, IAF ஆவடி, மிட்டனமல்லி காலனி, பாடசாலை தெரு, எண்.22/1 என்கிற முகவரியில் வசிக்கும் R. பாஸ்கர் மேற்படி கிராமத்திலுள்ள கிராம நத்தம் சர்வே எண்.282/2A1B Part. Town Survey No. 19/1, வார்டு A Block 39–ல் உள்ள வீட்டுமனை, முத்து மகன் குமார்,(1) முத்து மனைவி சாரதா (2) E.ராமச்சந்திரன் மகன்கள் R. பாஸ்கர், (3) R.செல்வமணி, (4) ஆகியோர் பெயரில் ஆவடி நகர நில அளவை பதிவேட்டில் தாக்கல் ஆகியுள்ள இடத்தை ஆக்கிரமித்து என் வீட்டுமனையிலிருந்து தெருவீதி வரை செல்லும் 7 அடி பாதை மற்றும் பாடசாலை தெருவையும் ஆக்கிரமித்து சட்ட விரோதமாகவும் விதிமீறல் கட்டிடங்களை கட்டியுள்ளார்.

எதிர்மனுதாரர் முத்துமகன் குமார் அவர்களின் சட்ட விரோத ஆக்கிரமிப்பாலும், விதிமீறல் கட்டிடங்களினாலும் என் வீட்டு மனைக்கு போதுமான பாதை இல்லாமல் அவதிப்படுகிறோம். ஆகவே சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகளையும் விதி மீறல் கட்டிடத்தையும் அகற்றி ஆக்கிரமிப்பாளர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க ஆவடி மாநகராட்சி ஆணையாளருக்கு உத்தரவு வழங்க வேண்டுகிறேன்.

ஆகவே என் புகார் மனுவினை பரிசீலனை செய்து உரிய விசாரணை மேற்கொண்டு ஆவடி வட்டாட்சியரின் விசாரணை அறிக்கை மற்றும் W.P. No. 34627 of 2004. Dt. 04.08.2017 – ன் நீதிமன்ற ஆணையின்படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920–ன் பிரிவு 182, 216–ன்படியும், CMDA கடிதம் எண். Ec/N-11/9143/2019. dt. 30.01.2019 –ன் படியும் எதிர்மனுதாரர் முத்து மகன் குமார் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, சட்டவிரோத ஆக்கிரமிப்பு, விதிமீறல் கட்டிடங்களை அகற்ற ஆவடி மாநகராட்சி ஆணையாளருக்கு உத்தரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையாளர், ஆவடி மாநகராட்சி ஆகியோரை 29.07.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.07.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரர் தனது 28.07.2021 நாளிட்ட மின்னஞ்சலில் தனது மகளின் திருமணம் சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்து கொண்டு இருப்பதால் மகளின் திருமண சுபநிகழ்ச்சி முடிந்தவுடன் இம்முறை மன்ற நடுவத்திற்கு நினைவூட்டல் செய்வதாகவும் அதன்பிறகு தகுந்த நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பை அகற்ற உரிய ஆணையிடும்படி கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். ஆவடி மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் 28.07.2021 நாளிட்ட மின்னஞ்சலுடன் அனுப்பிய தனது கடிதத்தில் சம்பந்தப்பட்ட பிரிவு எழுத்தரின் தாயார் காலமாகிவிட்டபடியால் விடுப்பில் உள்ளதாகவும் மேற்படி விசாரணைக்கு அறிக்கை தயார் செய்ய வேண்டியிருப்பதால் விசாரணைக்கு கால அவகாசம் கேட்டுள்ளார். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரும் கூடுதல் அவகாசம் கேட்டிருந்ததால், அவர்களை விசாரணைக்கு மீண்டும் 04.10.2021 அன்று ஆஜராகுமாறு 27.09.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. 04.10.2021 அன்று நேரடி விசாரணையில் முறையீட்டு மனுதாரர் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார். தனது வாக்குமூலத்தில் " ஆவடி மாநகராட்சி மிட்டனமல்லி கிராமம் 2–வது வார்டு பாடசாலை தெரு, புல எண்.282/2A1B. T.S. No. 39 & 19/1 மற்றும் 7 அடி அகலபாதை part–ல் தெருவை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதை இம்முறை மன்றத்தில் என்னால் முறையீடு செய்யப்பட்டது. அம்முறையீட்டு மனுவின் மீதான இறுதி ஆணை நாள் 27.04.2017–ல் ஆக்கிரமிப்பை 10 நாட்களுக்குள் அகற்ற வேண்டும் என ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. ஆனால், சில நாட்களில் அவ்விடம் மறுபடியும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் அந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் எனக்கு சொந்தமான கூட்டுரிமை இடத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்பதையும் இம்முறைமன்றத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்றிடவும், அனுமதியின்றி எனக்கு சொந்தமான கூட்டுரிமை சொத்தில் T.S. No. 39 & 19/1- ல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை அகற்றவும் தேவையான உத்தரவினை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆக்கிரமிப்பாளர் கட்டியுள்ள கட்டிடம் எனக்கு உரிமையான கூட்டுரிமை சொத்து W.P.No.34627 2004–ன் படி தனியார் பாதை அல்லது சொத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியிருந்தால், அவற்றை அகற்ற Local Bodies–க்கு அதிகாரம் உள்ளது என்றும் அதன் படி விதிமீறல் கட்டிடத்தை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. ஆவடி மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் 04.10.2021 அன்று விசாரணைக்கு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். தனது வாக்குமூலத்தில், " ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மிட்டனமல்லி கிராமம் பாடசாலை தெருவில் திரு பாஸ்கர் என்பவர் அளித்துள்ள புகார் மனு தொடர்பாக 01.10.2021 நாளிட்ட எனது அறிக்கையினை எனது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். மேலும் இந்நேர்வில் கண்டுள்ள இடத்தை நேரடியாக பார்வையிட்டு மனுதாரர் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமானதா அல்லது தனியாருக்கு சொந்தமானதா என்பதையும், மேற்கண்ட

இடத்தில் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் குறித்தும் ஆய்வு செய்தும், அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு ஏற்கனவே அறிவிப்பு (Notice) வழங்கிய நிலையில், அடுத்தகட்டமாக Lock and seal நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையினை இம்மன்றத்தின் மூலம் வழங்கப்படும் அடுத்த விசாரணை நாளில் இம்மன்றத்தில சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

5. ஆணையாளர், ஆவடி மாநகராட்சி அவர்களின் 01.10.2021 நாளிட்ட விரிவான அறிக்கையில், " ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மிட்டனமல்லி கிராமம் சர்வே எண்.282/2A1B பார்ட்–ல் அமையும் இடத்தினை நகர சார் ஆய்வர் புலத்தணிக்கை செய்ததில் ஆக்கிரமிப்பு எனும் இடம் பட்டா நிலத்தில் அமைகிறது என வட்டாட்சியர் ஆவடி, தமது ஒ.மு.எண்.457/2017/அ1, நாள் 23.01.2019 தேதியில் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளருக்கு (நிலம்) அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் இதன் அடிப்படையில் மனுதாரர் நீதிமன்றத்தை அணுகி உரிய பரிகாரம் பெற்றுக் கொள்ளலாம் எனக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் புகார் மனுவில் தெரிவித்துள்ள திரு. குமார் அவர்களின் கட்டிடம் முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டம் அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு (செயல்முறை உத்தரவு எண்.949/2.பொ(தி)/ம.க.ப.வடக்கு கோட்டம்/2017 நாள்.02.08.2018) lintel மட்டம் வரை Hollow Block–ல் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்குண்டான புகைப்பட நகலையும் இணைத்துள்ளார். இக்கட்டிடத்திற்கு திரு. குமார் த/பெ.முத்து என்பவர் 15' 9"x 43' 6" என்று சதுர அடி பரப்பளவில் ஆணையரின் முன் அனுமதியின்றி கட்டிடம் கட்டியுள்ளதை தொடர்ந்து திரு குமார் த/பெ. முத்து என்பவருக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 216(1) மற்றும் (2)–ன் கீழ் 27.11.2020 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டும், மேலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 216 (3)–ன் கீழ் 08.12.2020 அன்று ஊர்ஜிதம் செய்தும் அறிவிப்பு வழங்கப்பட்டு கட்டிட பணி தொடர்ந்து நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன் விவரத்தினை திரு R.பாஸ்கர் அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கடிதம் எண். EC/N-II/19143/2019 நாள். 30.01.2020 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்தபடி நடவடிக்கை எடுத்ததின் தன்மை குறித்து உறுப்பினர் செயலாளர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களுக்கு 03.12.2020 தேதிய ந.க. எண். 3417/2020/எப்2 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து புகார் மனுதாரர் திரு R.பாஸ்கர் அவர்களுக்கு 11.12.2020 அன்று Tamil Nadu Town Country Planning Act, 1971 படி Notice Calling For Approved Plan நோட்டீஸ் வழங்கப்பட்டது. இதுநாள் வரையில் அனுமதி கோரி மனு சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே திரு பாஸ்கர் அவர்கள் அனுமதி பெறாமல் RCC கூரை கட்டிடம் கட்டியுள்ளார். திரு பாஸ்கர் அவர்களின் மனை, சர்வே எண்.282/2A1B part–ல் மனை உட்பிரிவு செய்யப்படாமல் உள்ளது என வட்டாட்சியர் ஆவடி தமது 23.01.2019 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர் கோரும் 7 அடி பொதுப்பாதை பட்டாநிலத்தில் மனை வாங்கும்போதே தனியார் நிலத்தில் தாவா உள்ளதாக தெரிய வருகிறது. மேலும் மேற்கண்ட பாதை தொடர்பான ஆவணங்களை திரு பாஸ்கர் என்பவர் இதுநாள் வரையில் சமர்ப்பிக்கவில்லை. சர்வே ஆவணங்களிலும் பாதை என காண்பிக்கப்படவில்லை என வட்டாட்சியர் ஆவடி அவர்கள் 23.01.2019 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. மேலும் ஆணையாளர், ஆவடி மாநகராட்சி அவர்கள் தனது 27.10.2021 நாளிட்ட விவர அறிக்கையில் திரு பாஸ்கர் என்பவரின் புகார் மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற

நடுவர் முன் நடைபெற்ற விசாரணைக்கு 04.10.2021–ந்தேதி நேரில் ஆஜரான போது தெரிவிக்கப்பட்ட உத்தரவுக்கிணங்க திரு பாஸ்கர் மற்றும் திரு குமார் என்பவர்களை 12.10.2021ம் தேதி விசாரணைக்கு அழைத்து விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின்போது திரு பாஸ்கர் என்பவர் எழுத்து பூர்வமாக சமர்ப்பித்த கடித நகலில் பாடசாலை தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி எனது வீட்டையும் வரைமுறை செய்து என் வீட்டிற்கு சாலை அமைத்து கொடுக்குமாறு" தெரிவித்துள்ளார்.

7. திரு பாஸ்கர் அவர்களின் கோரிக்கைபடி பாடசாலை தெருவில் ஆக்கிரமிப்பு ஏதேனும் உள்ளதா, திரு குமார் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா என புல தணிக்கை செய்து அறிக்கை வழங்க கோரி வட்டாட்சியர்,ஆவடி அவர்களுக்கு 05.10.2021 ஆம் தேதி கடிதம் அனுப்பப்பட்டு 22.10.2021 அன்று புல தணிக்கை செய்து வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க. எண்.02000/21/ஆ1 நாள் 25.10.2021 ஆம் தேதிய கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புல எண் திரு முத்து மகன் குமார் மற்றும் முத்து மனைவி சாரதா ஆகியோர் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளதை நகரளவை 19–ல் உட்பிரிவுகள் ஏதும் செய்யப்படவில்லை. மேற்படி நிலத்தில் மூன்று வீடுகள் உள்ளன. திரு. குமார் மற்றும் திருமதி. சாரதா அவர்களின் குடும்பத்தினர் செல்வதற்கு பட்டா நிலத்தில் கிழக்கு பக்கமாக வடக்கு பக்கம் 1.9 மீட்டர், தெற்கு 1.5 மீட்டர் மற்றும் கிழக்கு 42.6 மீட்டர், மேற்கு 42.6 மீட்டர் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழியானது பட்டாவழி என்றும் அரசு புறம்போக்கு வழி இல்லை என தெரிய வருகிறது.

மேலும், நகரளவை எண்.19–ல் உள்ள பட்டாதாரர் திரு குமார் மற்றும் திருமதி சாரதா ஆகியோர் நகரளவை எண்.39–ல் செல்லும் சாலையில் 04 சதுர மீட்டர் அளவில் படிகட்டு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும், நகரளவை எண்.39–ல் பாடசாலை தெருவில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. புல தணிக்கை அடிப்படையில் திரு குமார் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்த 04 சதுர மீட்டர் படிகட்டு 25.10.2021ந்தேதி அப்புறப்படுத்தப்பட்டது.

8. மேலும் சர்வே பதிவேடுகளில் திரு முத்து மகன் குமார் மற்றும் முத்து மனைவி சாரதா ஆகியோர் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது. நகரளவை 19–ல் உட்பிரிவுகள் ஏதும் செய்யப்படவில்லை. மேலும் பட்டா மனையில் பட்டா வழி (வரைப்படத்தில் கண்டவாறு) என்றும் அரசு புறம்போக்கு வழி இல்லை எனவும் தெரிவித்துள்ளார்கள்.

திரு பாஸ்கர் அவர்கள் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியுள்ளார் எனவே, நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 85–ன் கீழ் locking and sealing notice 05.10.2021 அன்று நேரில் சார்வு செய்யப்பட்டது. மேற்கண்ட கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட 04 சதுர மீட்டர் படிகட்டு ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்தப்பட்டுள்ளது என ஆவடி மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

9. முறையீட்டு மனுதாரர் மனு மற்றும் அவரது வாக்குமூலம், ஆணையர், ஆவடி மாநகராட்சி அவர்களின் வாக்குமூலம் மற்றும் 01.10.2021 மற்றும் 27.10.2021 நாளிட்ட அறிக்கைகள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திரு. பாஸ்கர் அவர்களின் கோரிக்கைபடி திரு.குமார் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்த 04 சதுர மீட்டர் படிக்கட்டு 25.10.2021 ஆம் தேதி அப்புறப்படுத்தப்பட்டதை அறியமுடிகின்றது.மேலும் திரு.குமார் மற்றும் திருமதி. சாரதா அவர்களின் குடும்பத்தினர் செல்வதற்கு பட்டா நிலத்தில் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழியானது பட்டா வழி என்றும் அரசு புறம்போக்கு வழி இல்லை எனவும் அறிய முடிகின்றது. இந்நிலையில் திரு.பாஸ்கர் அவர்களின் கோரிக்கையான ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது. இருப்பினும் மனுதாரர்

திரு.ஆர்.பாஸ்கர் அவர்கள் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியுள்ளதாக அறிய முடிகின்றது. ஆதலால் இப்பொருள் தொடர்பாக தொடர் நடவடிக்கையினை உரிய சட்டப்பிரிவுகளின்படி எடுக்க ஆவடி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு ஆர்.பாஸ்கர்,
த/பெ.சி.ராமச்சந்திரன்,
22/1, பாடசாலை தெரு,
மிட்டனமல்லி, 2–வது வார்டு,
IAF ஆவடி, சென்னை – 600 055.

2)ஆணையாளர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4)இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகுமுறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்

இ.கோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

28/12/21

செயலாளர்